உ

# ஞானோதயம்

ஞானம் 01 சுபானு ௵ பங்குனி ௴ (06 - 03 - 2004) உதயம் 10



பங்குனி 2004

அன்பளிப்பு: ரூபா 15/-

# சைவத்திருநெறியை
# வாதத்தின் மூலம் வலியுறுத்திய
# வாதவூரர்

கைலாய மலையின் கண்ணே பழைய வேதங்களை அத்தியனஞ் செய்கின்ற அந்தணர்கள் தரிசித்து வணங்கும்படியாக மானையும், மழுவையும் திருக்கரங்களிலே கொண்டு இடப் பாகத்திலே உமையம்மையார் வீற்றிருந்து திருவுள்ளம் மகிழும் படியாக அழகு விளங்கா நின்ற திருக்கோயில் ஒன்று உண்டு. அங்கு மந்திரவடிவாகிய சிங்காசனத்தின் மேல் உருவத்திருமேனி கொண்டு எம்பெருமான் ஸ்ரீ கண்ட சரீரியாக வீற்றிருந்தருளினார். அத்தருணம் முனிவர்கள் வேதங்களைப் பொருள் தோன்றப் பாராயணஞ் செய்து முறைப்படி வணங்கினார்கள். பிரம விஷ்ணுக்களும் திருவருளைப் பெறுவதற்கு இதுவே ஏற்ற தருணம் என நினைந்து வேதங்களாகிய சிலம்புகளைத் தரித்த திருவடிகளை வணங்கினார்கள். சூரியனும் சந்திரனும் ஒருங்கே இருக்கின்ற தன்மைபோல எம்பெருமானும் பிராட்டியும் அமர்ந் திருக்க அந்த ஒளி பிரகாசிக்கப், பக்தர்கள் அரகர சிவ சிவ என்று உச்சரித்து அன்பு மேலீட்டினாலே அழுதார்கள்.

தேவரீர் எங்களுக்கு முத்தியைத் தந்தருளும் என்று மனத்தினாலே இறைஞ்சிப் பஞ்சதருக்களின் மலர்களைத் தூவி வணங்கினார்கள். இலக்குமி, பூமிதேவி முதலாய தேவ மகளிர் உலகமாதாவாகிய உமையம்மையாருக்கு அருகே நின்று வழி பட்டார்கள். இந்தப்பிரகாரம் தெய்வத்தன்மை பொருந்திய சபாமண்டபத்திலே வீற்றிருக்கும் பரம பிதாவாகிய சிவபெருமான் ஆரிய மொழியில் வெளிவந்த சிவஞானமாகிய அமுதத்தைச் செந்தமிழில் உண்டாக்கப்போகும் திருவாதவூரடிகளை அடிமை கொள்ளத் திருவுள்ளங் கொண்டார். அங்கே உள்ள பக்தர்களாகிய கணநாதர்களைப் பார்த்து நீவிர் பூமியிலே உள்ள மனித வடிவத்தைக் கொண்டு வாருங்கள் என்று பணித்தார். அதன்மேல் நாமும் சிறந்த பக்குவ ஆன்மாக்களுக்கு முத்தியைக் கொடுக்கும் ஞான தேசிகத் திருமேனியைக், கொண்டு கைலை யங்கிரியை விட்டு நீங்கித் தமது திருவடிகளைப் பூமியிலே பொருந்த நடந்து வந்து அக்கினியை வளர்க்கும் தெய்வப்பதி யாகிய திருப்பெருந்துறை என்று கூறப்படும் அப்பதியின் கண் வந்து சேர்ந்தார்கள். அப்பதியிலே புன்னைமரங்களும் சண்பக மரங்களும் நிறைந்திருந்தன. மரங்களின் மேல் சஞ்சரிக்கும் குரங்குக் கூட்டங்கள் பாயும் தோறும் சத்திக்கின்ற வண்டுக்

கூட்டங்கள் இராகம் பாடத்தொடங்கின. மேலும் அங்கே கோங்கு மரங்களும் பலா, கமுகு தென்னை மகிழ் ஆகிய மரங்களும் நிறைந்து காணப்பட்டன. அப்பூங்கா எவ்வாறு இருக்கின்றது என்றால் வண்டினது பாடல்கள் தோத்திரமாகவும், சிவசந்நிதியில் மனம் உருகும் பக்தர்களைப் போலக் காட்சியளித்தது. இத்தகைய சிறப்புமிக்க சோலையின் மத்தியிலே மெய்மையாகிய பூக்களைப் பூத்து ஒரு குருந்தமரம் அறிஞர்களைப் போன்று காட்சி தந்தது.

திருவாதவூரடிகளை ஆட்கொள்ள வந்த சிவபெருமான் அந்தப் பூஞ்சோலையின் கண்ணே நாம் சேருவோம் என்று திருவுளத்திற் கிருபை கூர்ந்து பூக்களால் பொலியும் அந்தக் குருந்த மரத்தடியை அடைந்து திருவாதவூரடிகளது பாசக்கட்டு அறும் காலத்தை எதிர் நோக்கி இருந்தார். சந்திரனை தரித்த சடா முடியை உடையவர். அவ்வாறு இருக்கும் போது அவரது திருவடிகளை அடையப்போகும் திருவாதவூரடிகள் பலரும் போக்குவரத்துச் செய்யும் அவ்வழியின் கண்ணே செல்வாராயினர் என்று சோலையின் சிறப்புக் கூறப்படுகிறது. காயம் பூக்கள், காந்தட் பூக்கள் எல்லாம் ஒவ்வொரு செயலைக் காட்டுகின்றன.

முல்லைக் கொடிகளும் மலர்ந்தன என்கிறார். நெடிய மரங்கள் திருவாதவூரடிகளது பிறவிநீக்கம் பற்றி அறிந்து கண்களினின்றும் நீரைச் சொரிந்தன என்கிறார் திருவாதவூரடிகள் தாம் வந்த நெறியை விட்டு நீங்கித் திருப்பெருந்துறையின் சமீபமாக வந்தார். இவ்விடத்தில் திருப்பெருந்துறையின் சிறப்புக் கூறப்படுகின்றது. அவ்வழியாலே சென்ற திருவாதவூரருக்கு அங்கே சிவபெருமானாகிய ஞானாசாரியருடன் வீற்றிருக்கும் தொண்டர்கள் ஓதுகின்ற சிவாகம ஒலி கேட்டது. உடனே அவர் ஏவலாளர்களை அழைத்து நீவிர் அவ்விடம் சென்று இது என்ன ஒலி என்பதை அறிந்து வாருங்கள் எனப்பணித்தார். அவ்வாறு அனுப்பப்பட்ட தூதுவர்கள் சென்று பார்த்து விட்டு வந்து சிவபெருமானை ஒத்த சிவயோகியார் குருந்தமரநிழலிலே வீற்றிருக்கின்றார் என்று கூறுதலும் மிகவும் மகிழ்ந்தார். உடனே பூஞ்சோலைக்குச் சென்று சிவிகையை விட்டு இறங்கி அத் தெய்வ சபையைக்கண்டார்.

(வளரும்)

# சைவ நாற்பாதங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

செல்வி. ப. ருத்திராதேவி

**கிரியை:**

சரியை நெறியில் தனது உடம்பை இறைவனுக்கு உரியதாக்கிய சாதகன் கிரியைநெறியில் இந்திரியங்களை (ஐம்பொறி) சிவார்ப்பிதம் செய்கின்றான். கிரியை என்பது புறத்தொழில், அகத்தொழில் இரண்டாலும் இறைவனின் அருவுருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு ஆகும். இந்நெறியில் சாதகன் தன்னை மகனாகவும் இறைவனைத் தந்தையாகவும் பாவித்து அன்பு செலுத்தி வழிபடுவான். இதனைச் சற்புத்திர மார்க்கம் என்றும் கூறுவர். கிரியை என்பது விதிப்படி செய்யும் சிவபூசை ஆகும். புதியவாசனையுள்ள பூக்கள், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலியன பூசைக்குரிய உபகரணங்கள் ஆகும். பூசைசெய்யும் இடம் பூசைத்திரவியங்கள் என்பவற்றை மந்திர ஜெபத்தால் புனிதப்படுத்தி இறைவனை அவ்விடத்தில் எழுந்தருளச் செய்து மனம், மொழி, மெய் ஆகியவற்றால் பக்தி சிரத்தையோடு பூசை செய்தலே கிரியை வழிபாடு ஆகும். கிரியை நெறி நின்று வழிபடுபவர்களையே ''முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன்'' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டர் தொகையில் குறிப்பிடுகின்றார்.

அரும்பு, மலர், காய், கனியில், மலர் போன்று விளங்கும் கிரியைநெறி பற்றிய பின்வரும் திருமந்திரப் பாடல் குறிப்பிடப்படுகின்றது.

''பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்தி டன்னமும் நிசுத்தி செய்தல் மற்று
ஆசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே.''

அதாவது சிவலிங்கபூசை செய்தல், திருமுறைகளை ஓதுதல், துதித்தல், திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல், குற்றமற்ற விரதங்களை அனுட்டித்தல், உண்மைபேசல், மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களையும் தூய்மையாக

வைத்திருத்தல், பிற உயிர்களிடம் அன்பும் பரிவும் காட்டல், அன்னதானஞ் செய்தல், ஆன்மசுத்தி செய்தல் ஆகியன குற்ற மற்ற சற்புத்திர மார்க்கத்து ஒழுக்கங்கள் ஆகும்.

கிரியைநெறி நான் என்ற அகங்காரத்தையும் எனது என்ற மமகாரத்தையும் தகர்த்தெறியும் நெறியாக அமைகின் றது. சமய குரவருள் திருஞானசப்பந்தர் சற்புத்திரமார்க்க நெறியில் நின்று இறைவனை வழிபட்டவர். கிரியை வழிபாட் டால் இறைவனோடு இணைந்தவர்களில் சண்டேஸ்வர நாயனார் முக்கிய இடம் பெறுகின்றார். மன ஒருமைப்பாட்டுடன் தான் செய்த சிவபூசைக்குத் தந்தையார் இடையூறு செய்த போது அவருடைய காலை வாளால் வெட்டி ''தாதையைத் தாள் அற வீசிய சண்டி'' ஆனார்.

புற நினைவுகள் அற்றுப் பூசையில் ஈடுபட்டிருப்பதால் அவருக்கு நாம் செய்யும் வணக்கம் தெரியாது என்பதற்காகவே அவர் சந்நிதியில் கைதட்டும் வழக்கமும் உண்டாயிற்று. இத்தகைய மன ஒடுக்கத்தோடு செய்யும் பூசைக்கு இடையூறு நேரக் கூடாது என்பதற்காகவே அவரது சந்நதிக்கும் இறைவனது சந்நதிக்கும் இடையில் அடியார்கள் செல்வதில்லை.

கிரியை நெறி நின்றோர் புதல்வருக்குள்ள உரிமைபோல சிவபெருமானுக்கு அண்மையில் வீற்றிருந்து போகங்களைப் பெற்று வாழ்வர். இதனைச் சாமீப முக்தி என்பர்.

(தொடரும்)

---

# மாசிமாத சிறப்புகழ்

## மாசிமாதம் கும்பசங்கிராந்தி விஷ்ணுபதி புண்ணிய காலம்:

மாசிமாத மேன்மை சிவராத்திரி விஷேடமாகும். பன்னிரு மாதங்களில் வரும் சிவராத்திரியை விட மாசிமாதம் சிறப்பாகிறது இக்காலம் சிவன்ராத்திரி ஆகின்றது. சகல ஜீவராசி



நயினை குருமணி
சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்



# உயர் திரு. ம.சி. சிதம்பரப்பிள்ளை

இப்பெரியார் பாலர் ஞானோதய சபையின் வளர்ச்சிக்குச் செய்த பணிகளோ அளவிட்டுக் கூறமுடியாது. தந்தையார் காலந்தொட்டு எமது காலப்பகுதி வரை ஞானோதய சபையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். அநேக மாணவர்களின் சமயவளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கியவர். இவரது செயற்பாடுகள் குறித்த சிறப்புக் கட்டுரை 08. 12. 2003 ஞானோதயத்தில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

களையும் படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடி நிற்கின்ற பரம்பொருளின் திருவிளையாடல் நிகழ்கிறது. இந்த சிவ ராத்திரி விரதம் பக்தியுடன் ஆசாரசீலராய் 24 அன்றி 12 வருடங்கள் உபவாசம் அனுஷ்டிப்பவர்கள் சிவஸ்தலங்களுக்குச் சென்று நான்கு ஜாமப் பூஜைகளில் அபிஷேகம் செய்து அர்ச்சனைகள் புரிந்து அன்னதானம் வழங்கி ஆராதனை செய்து நிதானம் தவறாமல் வழிபாடு செய்தவர்கள், வணங்கியவர்கள் இறைதொண்டுகள் செய்து பணியாற்றியவர்கள் இகலோகவாழ்வு மலர்ந்து முத்திபேறின்பப்பேறு அடைவார்கள் என்பது உண்மைச் சான்றுகளாகின்றன.

''நமச்சிவாய வாழ்க நாதன் தாழ் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க''

மாசிமாதத்தில் மகா மகம் பன்னிரண்டு வருஷங்கட்கு ஒருமுறை வரும் மகா நக்ஷத்திரம் மகாமகம் என அழைக்கப்படும். மாமாங்கத்தீர்த்தோற்சவம் நிகழும் புண்ணிய காலமாகின்றது.

கும்பகோணம் மகாமகக்குளம் தீர்த்தோற்சவம் கோதாவரி, காவிரி, யமுனை, கங்கை, சரஸ்வதி ஆகிய புண்ணிய நதிகள் இக்குளத்தில் ஞானாக்கினி தேவனால் நீர்பெருக்கி அருளப்படுகிறதாக தலபுராணங் கூறுகின்றது.

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டாள் கபாலீச்சரமமர்ந்தாள்
அடலானேறூரு மடிகளடி பரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்

திருஞானசம்பந்த சுவாமிகள் மகிமையருளினார்.

ஏவியிடர்க் கடலிடைப்பட்டினைக்கின்றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கியாங்கே
கூவியமருலலகனைத்து முருவிப்போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார்போலும்

1 தாவிமுதல் 2 காவிரிநல் 3 யமுனை 4 கங்கை
5 சரஸ்வதி 6 பொற்றாமரை 7 புட்கரணி தெண்ணீர்க்
8 கோவியொடு 9 குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே.

9 தீர்த்தங்களைக் குறிப்பிடுகின்றார், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளுகின்றார்.

காசியில் செய்த பாவம் கும்பகோணத்தில்
நசித்து விடுகின்றது
கும்பகோணத்தில் செய்த பாவம்
கும்பகோணத்திலேயே நசித்து விடுகிறது.

இங்கே கும்பமேளா தீர்த்தமாடுபவர்கள் இம்மையில் மறுமைப் பயனடைந்து இறைவன் திருவருள் பெறுகின்றார்கள் என்பது சான்றாகும்.

## சங்கடசதுர்த்திவிரதம்:

மாசிமாதம் அபர பட்சத்தில் செவ்வாய்க்கிழமை கூடிய சதுர்த்தியில் விரதம் தொடங்க வேண்டும். இச்சதுர்த்தியை அங்காரகச் சதுர்த்தி என அழைப்பார்கள். இவ்வழிபாட்டில் செவ்வாய்தோஷம் நீங்குவதாகும். மாசிமாதம் சங்கடசதுர்த்தியில் உபவாசமிருந்து சந்திரோதயத்தில் விநாயகப்பெருமானை எழுந்தருளச் செய்து பஜனை, பூஜனை பக்தியுடன் செய்து வந்தால் யாவும் நல்ல பலனாய் அமையும். ஒரு வருஷம்வரை வன்னிப்பத்திரம் பூவிதழ்களால் அர்ச்சனை புரிந்து வழிபடக் கூடிய சீக்கிரம் துன்பங்கள் நீங்கி நல்லருள் பாலிப்பார் விநாயகப்பெருமான். ஏனைய சங்கடங்களைப் போக்க வல்ல சதுர்த்தி விரதம் சங்கட சதுர்த்தி விரதமாகும்.

## மாசிமாதம் பூர்ண சதுர்த்தி விரதம்:

மாசி மாதத்தில் வரும் வளர்பிறைச் சதுர்த்தி. இச்சதுர்த்தியில் விநாயகப்பெருமானுக்கு உபவாச விரதமனுஷ்டித்து விளாங்கனி பழவகையுடன் பொங்கல் மோதகம், தாம்பூலம், தேங்காய் ஆகியவற்றுடன் நிறைவாகப் படைத்து நிவேதித்து நிறைந்த மனதுடன் வன்னி, வில்வம் பத்திரங்களால் அர்ச்சனை புரிந்து வழிபாடு செய்துவர நன்மைபே நிகழும். இக்காலத்தில் விநாயகப்பெருமானை சந்திரோதயத்திற்கு மூன் எழுந்தருளச் செய்து தரிசனம் பெறுவது சாலச் சிறந்ததாகும். ஏனைய விக்கினங்கள் நீங்கி நல்லருள் பெறுவீர்களாக.

சித்தாந்த பண்டிதர்
அன்பர் ஷர்மாஜி

# தீட்ஷா குரு

## நயினை சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள்

இப்பெரியாரின் சேவைகளைப்பற்றி அளவிட்டுக்கூற முடியாது. இவர் பல நூற்றுக்கணக்கான கும்பாபிஷேகங்களை நிகழ்த்தியுள்ளார். 45 குண்டங்கள் அமைத்துச் செய்த கும்பாபிஷேகங்களே அநேகம். எமது தேவஸ்தானத்தின் கும்பாபிஷேகம் 15. 09. 71ல் நடைபெற்றபோது நவகுண்டம் அமைத்து சிறப்பான முறையில் நடாத்தி வைத்த பெருமைக்குரியவர். அஞ்ஞான்று இவருடன் சேர்ந்து பங்கு கொண்ட குருமார்கள் மிகுந்த தகுதி வாய்ந்தவர். அத்துடன் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் அவர்களையும் எங்கள் தேவஸ்தானத்துடன் தொடர் கொள்ள வைத்தவரும் இவரேயாவர். காசி விநாயகரது முதற் கொடியேற்றம் 19. 04. 73ல் இவராலேயே செய்யப்பட்டது. இக்காலப்பகுதியில் சிறியேனை ஆசாரி அபிடேகம் செய்து கொடியேற்ற வைக்க வேண்டும் என்பது ஆணித்தரமான கொள்கையாக இருந்தது. யான் எவ்வளவோ மறுத்த போதிலும் அவர் கூறிய கூற்றை மறுக்கமுடியவில்லை. ''நீர் விநாயகருக்கு உரிய ஆள். நீர் செய்தால் தான் விநாயகர் அருள் பாலிப்பார்'' எனவே அவரது ஆணையை மறுக்க முடியவில்லை. புங்குடுதீவு சிவன்கோவிலில் வைத்துத் தீட்சை வைத்து ஆசாரிய அபிஷேகமும் செய்து வைத்தார்.

அவ்வமயம் தெல்லிவாழ் சைவப் பெருமக்கள் அவருடன் ஒத்துழைத்து இந்நிகழ்வை நிறைவேற்றினார்கள். அடுத்த ஆண்டிலேயே சிறியேனை கொடியேற்ற வைத்தார். தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் மகோற்சவம் நிகழ்த்தும் பேற்றைப் பெற்றேன். இவ்வாறு பல வழிகளிலும் தேவஸ்தானத்துக்கும், எமக்கும் செய்த பணிகளோ எழுத்தில் அடங்காது.

# சபையின் செயற்பாடுகள்

ஞானோதய சபை தனது 57வது ஆண்டு விழாவைச் சென்ற 6, 7, 8, 9, ஆகிய நான்கு நாட்கள் கொண்டாடியது. இவ்விழா இசைவிழாவாக இடம்பெற்றது. (6.2.2004) வெள்ளிக்கிழமை விநாயகருக்கு விசேட ஆராதனையின் பின் மாணவர்களது கூட்டுப்பிரார்த்தனை முதலியன இடம்பெற்றது. அதன்மேல் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் மாணவர் நூல்நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இரண்டாம் நாள் 07. 02. 2004 சனிக்கிழமை திரு. த. பூ. முருகையா அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. சிவத்தமிழ்வித்தகர்சிவமகாலிங்கம் அவர்களது சொற்பொழிவும், சிவஸ்ரீ தா. அரிகரசுப்பிரமணியக்குருக்கள் அவர்களது ஆசியுரையும் முக்கிய நிகழ்வுகளாக விளங்கின. மாணவ மாணவிகளது உபந்நியாசங்கள், இசைக்கச்சேரிகள் என்பன இடம்பெற்றன.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழகப் பீடாதிபதி சிவஸ்ரீ. ப. கோபாலகிருஷ்ணஐயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நல்லைக்குருமகா சந்நிதானம் சோமசுந்தரஞானசம்பந்த சுவாமிகளது அருளுரையும், திருமதி கலாதேவி பொன்னம்பலம் அவர்களது வரவேற்புரையும், வைத்தியகலாநிதி சோமாஸ்கந்தர் கார்த்திகைகுமார், செல்வன் குமரேசன் பாலசண்முகன் ஆகியோரது சிறப்புரைகளும் சிறப்பு அம்சமாகத் திகழ்ந்தன. மாணவர்கள் நிகழ்வுகளும் செல்வி. மதுமிதா வரதராஜசர்மாவின் இன்னிசைக்கச்சேரியும் இடம்பெற்றன.

நான்காம் நாள் நிகழ்வுகள் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் B. A. அவர்களது தலைமையில் இடம்பெற்றது. சிவஸ்ரீ. சு. தியாகராஜக்குருக்கள், செந்தமிழ்வேந்தன் சர்மாஜி ஆகியோரது ஆசியுரைகளும், மாணவர்கள் பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகிய நிகழ்வுகளும் துர்க்காதேவஸ்தானம் மகளிர் இல்லத்துச் செல்வியின் இன்னிசைக் கச்சேரியும் விழாவைச் சிறப்பித்தன. கலாதேவி பொன்னம்பலம் மாணவ மாணவிகளுக்குப் பரிசில்களை வழங்கினார்.

---

## ஆசி வழங்குவது யார்?

பாலர் ஞானோதய சபையின் 57 ஆவது ஆண்டுவிழாவின் நான்காம் நாள் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் அவர்கள் தமது தலைமையுரையில் ஓர் கருத்தைத் தெரிவித்தார். அஃதாவது ஆசி என்றால் என்ன? அது யாரால் செய்யப்படவேண்டும் என்ற நியதி உண்டு. அதை அறியாமல் இன்றைய உலகில் எல்லோரும் ஆசிவழங்குகின்றார்கள் என்பதாகும். இது சிந்திக்கப்படவேண்டிய விடயம். குருமார்கள், மற்றும் குடும்பஸ்தர்களாய் உள்ளவர்கள், வயது முதிர்ந்தவர்கள் ஆகியோரே ஆசிவழங்குவதற்குத் தகுதியானவர்கள். இதனை உணர்ந்து செயற்பட்டால் அனைவருக்கும் நன்மை பயக்கும்.

# தனித்துவம் மிக்கவர் தமிழ்ப்பேரறிஞர்
# இரங்கசாமி ஐயா அவர்கள்

இவர் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக்கொண்டவர். ஆரம்பக் கல்வியை உள்ளூர்ப் பாடசாலையில் கற்றபின் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் உயர் வகுப்புப் படித்துத் தேர்ச்சி பெற்றார். அதன்மேல் ஆசிரியதராதரமும் பெற்றார். பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் வசாவிளான் பாடசாலையில் அதிபராய் பல ஆண்டுகள் கடமை புரிந்தார். இவரது சகோதரி செல்வநாயகி அம்மா எமது தாயாராகும். தமிழ்ப்புலமை மிக்க இவர் பாட்டுக்கள் இயற்றுவதிலும் மிகுந்த திறமை மிக்கவர். இவர் இந்தியாவில் மலையாளம் என்ற இடத்தில் இலட்சுமி அம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். இதன் பயனால் இவருக்கு இரு ஆண்களும் ஒரு பெண்பிள்ளையும் புத்திரச்செல்வங்களாக அமைந்துள்ளனர்.

இப் பெருமகன் பாக்கள் இயற்றுவதிலும், பயன் சொல்வதிலும் மிகுந்த திறமை சாலியாக விளங்கினார். அரச உத்தியோகம் பார்த்த போதிலும் தமது ஆசாரத்தை விடாது கடைப்பிடித்து வந்தார். இவருக்குப் புன்னாலைக்கட்டுவன் ஆயாக் கடவைப் பிள்ளையார் குலதெய்வம் வித்துவான் கணேசையர் போன்றோரது வாரிசாக விளங்கினார். பாடசாலை தவிர்ந்த நேரங்களில் மாணவர்களுக்கு இலவசமாகக் கல்விச் சேவை செய்தார். அதுமாத்திரமா? சகோதரி செல்வநாயகி அம்மையாருக்கும், மைத்துனர் சிவகடாஷக் குருக்களுக்கும் வேண்டிய வேண்டியாங்கு நல் உதவிகள் பல புரிந்தார். எம்மையும் பால பண்டித பரீட்சைக்குப் படிக்க வைத்த பெருமை அவரையே சாரும். அன்னாரது பிள்ளைகள் நல்ல நிலமையை அடைவதற்கும் அவரே காரண கர்த்தாவாக விளங்கினார். இவரது சேவை எழுத்தில் அடங்காது. இவரிடம் கல்வி கற்று உயர் உத்தியோகம் பெற்றவர்கள் நூற்றுக்கணக்கானோராகும். தனக்கென வாழாது தமிழுக்கும் சைவத்துக்கும் அருந்தொண்டாற்றினார். பாடசாலை அதிபராக விளங்கிய போதும் சற்றும் பெருமை நோக்காது மாணவ உலகுக்கு ஆற்றிய சேவை எழுத்தில் அடங்காது. அநேக மாணவர்கள் இவரது இல்லத்திலே வந்து கல்வி கற்றதை எம்மால் காணமுடிந்தது. எமது தாயா

ரது இறுதிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இப்பெருமகன் செய்த பணிகளோ அளவிட்டுக் கூறமுடியாது.

அந்தண குலத்தின் தூண்டாமணி விளக்காக விளங்கினார். அக்கால கட்டத்திலே புன்னாலைக்கட்டுவனிலும் தெல்லி மாநகரிலும் அந்தண சிரேஷ்டர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் இரு பகுதியினருக்கும் தொடர்புகள் இருந்தன. தெல்லி மாநகர் தியாகவாசஐயர், சுந்தரமூர்த்தி ஆசிரியர் அவர்களும் இவரது மருகராவார். காசிவாசி செந்திநாதஐயர், கதிர்காம ஐயர், முத்துக்குமாரசாமிக்குருக்கள், கணேசையர் முதலாய பேரறிஞர்கள் இப் பெரியாரின் முன்னோராகும். அஞ்ஞான்று தெல்லிப்பழை புன்னாலைக் கட்டுவன் ஆகிய இரண்டு இடத்திலும் வாழும் அந்தணர்கள் தொடர்பு பூண்டோராக விளங்கினார்கள். இப்பெரியாரின் மனைவியார் இன்னும் கனடாவில் பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டிருகின்றார்.

## வினாக் கொத்து - 8, 9

சென்ற இதழின் 1 – 9 வரையான வினாக்களுக்கு விடைகள்)

1. அகத்தியமுனிவர்
2. நம்பியாண்டார்நம்பி
3. அப்பூதிஅடிகள்
4. மெய்கண்டதேவர், உமாபதி சிவாச்சாரியார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர்.
5. திருநாரையூரில் உண்டு
6. அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை
7. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்
8. மன்னார் மாவட்டத்தில் உள்ள மாந்தைக் கிராமத்தில் பாலாவிக்கரையில் உள்ளது.
9. கேது வழிபட்ட காரணத்தால் அப்பெயர் வந்தது.

வளரும்

இச்சஞ்சிகை தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் சார்பில், அதன் தலைவர் திரு. சி. கணேசலிங்கக் குருக்கள் அவர்களால், மானிப்பாய் சௌந்தரம் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.